


நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், அய்யாளம்மன் படித்துறை பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.13.70 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய பறவைகள் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி திட்டப்பணிகளை நேற்று முன்தினம் (20.11.2023) தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார். மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் டாக்டர்.இரா.வைத்திநாதன், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பழனியாண்டி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், மகளிர் திட்ட அலுவலர் ரமேஷ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.கங்காதாரணி, நகரப் பொறியாளர் சிவபாதம், மாவட்ட ஊராட்சி தலைவர் த.ராஜேந்திரன், அந்தநல்லூர் ஒன்றியக்குழு தலைவர் துரைராஜ், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், உதகை ஜெம் பார்க் ஹோட்டலில், இவ்வுலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு முன்னோடியாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன தொழில்களில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் நடைபெற்ற கருத்தரங்கில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் தொழில் நிறுவனங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஊராட்சி தலைவர் பொன்தோஸ், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் சண்முகசிவா, உதகை நகராட்சி தலைவர் திருமதி.வாணீஸ்வரி, துணை தலைவர் ரவிக்குமார் உட்பட பலர் உள்ளனர்.

### குட்கா வழக்கு:

# ஆதாரங்களை வலுவாக திரட்ட அரசு நடவடிக்கை!

## சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, நவ. 22 -

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி.

உச்சநீதிமன்றத்தில் ஆளுநர் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர், ரமணா மீதான வழக்கு விசாரனை தொடர அனுமதி அளித்திருப்பதாக தெரிவித்து உள்ளார்,

ஆளுநர் 13 ம் தேதி அனுமதி அளித்ததை அன்றே சொல்லி இருந்தால் நாங்கள் ஏன் கூட்டம் போட போகிறோம்.

தமிழக ஆளுநர் கடைசியாக அனுப்பப்பட்ட 5 மசோதக்களை நிறுத்தி வைத்துள்ளார், பத்து மசோதாக்கள் திருப்பி அனுப்பி உள்ளார்.

தமிழிசை சௌந்தர்ராஜன் தெலுங்கானாவில்



போய் அங்குள்ள முதல்வரோடு இணக்கமாக போகட்டும், அதன் பின்பு தமிழகத்திற்கு அறிவுரை. கூறட்டும்

குட்கா வழக்கில் ஆளுநர் ஒப்புதல் அளித்துள்ளார் என்று சி.பி.ஐ.க்கு நாங்கள் தகவல் தெரிவிப் போம் .

அதன் பின்பு அவர்கள் விசாரணை தொடங்குவார்கள்,

விசாரணை தொடங்குவதற்கு முன்பு ஆதாரங்களை அதிக அளவு திரட்டி வழக்கு இல்லாமல் வலுவாக போவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள உள்ளோம்,

வலுவான ஆதாரங்களை திரட்டி நீதிம ன்றத்தில் நிரூபிக்காவிட்டால் வழக்கு நீர்த்துப் போய்விடும் எனவே ஆதாரங்களை வலுவாக திரட்ட அரசு நடவடிக்கை எடுக்கும் ஆளுநருக்கு எதிராக வழக்கு தொடர்ந்த விவகாரத்தில் நாங்கள் முன்வைத்த காலை பின் வைக்க மாட்டோம். தி.மு.க. என்றுமே முன் வைத்த காலை பின் வைக்காது.

தி.மு.க.வைப் போல் ஒரு சகிப்புத்தன்மை கொண்ட கட்சி போல் வேறு எந்த கட்சியும் கிடையாது,

ஆளுநரின் நடவடிக்கைகளை பொறுத்துக் கொண்டு இருந்தும் சகித்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில்தான் நாங்கள் உச்சநீதிமன்றத்தில் வேறு வழியின்றி வழக்கு தொடர்ந்தோம்,

ஒன்றிய சிறைச்சாலைகளை ப்ரோன் மூலம் கண்காணிப்பதற்கு சிறைத்துறை தமிழக அரசிடம் அனுமதி கேட்டு கடிதம் அனுப்பி உள்ளதாக தகவல் உள்ளது.

சிறைகளை கண்காணிப்பது அரசின் கடமை ஆகையால் அதற்கு ஒப்புதல் அளிக்கப்படும் .

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

### சேலம் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர்

# வீரபாண்டி ஆறுமுகம் 11 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள்!

சேலம், நவ. 22 -

சேலம் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் செயலாளரும், முன்னாள் வேளாண்துறை அமைச்சரும், “சேலத்து சிற்பி” என முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களாலும் சேலத்து சிங்கம் என அன்புடன் மக்களாலும் கழகத் தோழர்களா



லும் போற்றப்பட்டவருமான வீரபாண்டி யார் அவர்களின் 11ஆம் ஆண்டு நினைவு நாள் நாளை ( 23.11.2023 - வியாழக்கிழமை) அனுசரிக்கப்படுகிறது. அதனையொட்டி அன்று காலை 8 மணி அளவில் பூலாவரி கிளைக்கழக அலுவலகத்திலிருந்து எனது தலைமையில் அமைதி ஊர்வலம் புறப்பட்டு அன்னாரின் நினைவிடத்தை அடைந்து அங்கே மலரஞ்சலி செலுத்தப்படும்.

இந்நேரத்தில் திரு.வீரபாண்டியார் அவர்கள் இறப்பதற்கு 9 ஆண்டுகளுக்கு முன்னால் அவர் மறைந்த அதே நவம்பர் 23 ல் கழகத் தலைவர் கலைஞர் அவர்களையும் ஆருயிர் தளபதியார் அவர்களையும், பல இலட்சம் கழக தொண்டர்களையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டு மறைந்த, தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கும் பூலாவரி அலுவலகத்தில் அஞ்சலி செலுத்தப்படும். இந்நிகழ்வில் கழகத்தின் அனைத்து நிர்வாகிகளும், தொண்டர்களும், மறைந்த தலைவர்கள் மீது பற்றும், பாசமும் கொண்ட பொதுமக்களும் திரளாகப் பங்கேற்று பெருமை சேர்த்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### பல்லாவரம் தொகுதியில் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணி -

# குரோம்பேட்டை காலிமனைகளில் மழைநீர் அகற்றும் பணி!

## இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு!

பல்லாவரம், நவ. 22 -

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அஸ்தினாபுரம் பகுதியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. இந்த பணிகளை அதிகாரிகளுடன் நேரில் சென்று இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து குரோம்பேட்டை ஜமீன் ராயப்பேட்டை பகுதியில் உள்ள காலி மனைகளில் மழை நீர் தேங்கி நிற்பதால் அப்பகுதி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுவதாக புகார் வந்ததை தொடர்ந்து இ.கருணாநிதி எம்.எல்.ஏ. காலி மனைகளில் தேங்கி நிற்கும் தண்ணீரை பம்புகள் மூலம் வெளியேற்றுவது குறித்து இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து பல்லாவரம் துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் பல்லாவரம் தாசில்தார் அலுவலகம் அருகே உள்ள பொத்தேரியில் இருக்கும் ஆகாயத் தாமரை செடிகளை அப்புறப்படுத்துவது குறித்து கழிவுநீர் கலப்பது தடுப்பது குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.




தருமபுரி கிழக்கு மாவட்டம்,பென்னாகரம் பருவதனஹள்ளியில் மாவட்ட அளவிலான 70 ஆவது கூட்டுறவு வாரவிழாவில் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி சிறப்பாக செயல்பட்ட சங்கங்களுக்கு கேடயங்களை வழங்கினார்.உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.கே.மணி,எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி,கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராமதாஸ்,தலைமைச்செயற்குழு உறுப்பினர் தருமச்செல்வன், ஒன்றிய செயலாளர் எரியூர்.என்.செல்வராஜ் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இருந்தனர்.

### நாமக்கல் மாவட்டத்தில்

# அதிநவீன பால் பதப்படுத்தும் மையம் ஜனவரியில் துவக்கம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், நவ. 22 -

மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சகம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஆகியவற்றின் சார்பில், நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கான அதிநவீன பால் பதப்படுத்தும் ஆலை அமைக்கும் பணிகள், விரைவில் தொடங்கும் என்றும் இப்பணிகளை தேசிய பால்வள வாரியம் மேற்கொள்ளும் என்று நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி சாலையில் உள்ள ஆவின் அலுவலகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் கட்டப்பட உள்ள புதிய தானியங்கி நவீன ரூபாய் 89.28 கோடி திட்ட மதிப்பீட்டில் நிறுவுவதற்கான அரசாணையை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச. உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமாரிடம் சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில் வனத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன்,



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு நாமக்கல் மாவட்டத்தில் கட்டப்பட உள்ள புதிய தானியங்கி நவீன ரூபாய் 89.28 கோடி திட்ட மதிப்பீட்டில் நாமக்கல் கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியத்திற்கு அதிநவீன பால் பதப்படுத்தும் மையம் அமைப்பதற்கான அரசாணை நகல்களை பால் உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகிகளிடம் வழங்கினர். பின்னர் கே. ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

தமிழகத்தில் அதிக அளவில் பால் உற்பத்தி செய்யப்படும் ஒன்றியங்களில் நாமக்கல் மாவட்டம் ஒன்றாக உள்ளது. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியமானது, ஏற்கனவே சேலம் மாவட்டத்தில் இருந்து பிரிக்க ப்பட்டு தற்போது நாமக்கல்லில் இயங்குகிறது. தற்போது, நாமக்கல் மாவட்டத்தில் தினந்தோறும் சேகரிக்கப்படும் சுமார் 1.70 லட்சம் லிட்டர் பால், சேலம் ஆவினுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு பதப்படுத்தி, பேக்கிங் செய்து, உப பொருள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இதனால் நாமக்கல் ஒன்றியத்திற்கு லிட்டர் ஒன்றுக்கு 3 ரூபாய் 80 காசுகள் வரை கூடுதல் செலவாகிறது. எனவே, நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு என தனியாக பால் பதப்படுத்தும் ஆலை அமைக்க வேண்டும் என பால் உற்பத்தியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை வைத்தனர். இதனடிப்படையில் நாமக்கல்லில் நவீன பால் பதப்படுத்தும் ஆலை ரூ. 90 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இதற்கு அனைவர் சார்பிலும் தமிழ்நாடு அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நவீன பால் பதப்படுத்தும் ஆலை நாமக்கல்லில் அமையும்போது இங்கேயே தினந்தோறும் சுமார் 2 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, அதனை பதப்படுத்தி, பேக்கிங் செய்து, உபபொருட்கள் தயாரித்து, விற்பனைக்கு அனுப்ப முடியும். இதனால், லாபத்தை கொண்டு, நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஊக்கத்தொகை வழங்க முடியும்.

பாராளுமன்ற மாநிலங்களவையில் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தில் இதுகுறித்து கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் அமைச்சகம், நாமக்கல்லில் புதிதாக அமைய உள்ள அதிநவீன பால் பதப்படுத்தும் ஆலைக்கு ரூ. 8 கோடி மானிய உதவியை அளித்துள்ளது.

இந்த அதிநவீன பால் பதப்படுத்தும் ஆலையானது, நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசு, மத்திய உணவு பதப்படுத்தும் அமைச்சகம் ஆகியவற்றின் சார்பில் அமைய உள்ளது. மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியோடு இந்த அதிநவீன பால் பதப்படுத்தும் ஆலை வரும் ஜனவரி மாதத்தில் கட்டுமான பணிகள் தொடங்கும். இப்பணிகளை தேசிய பால்வள வாரியம் மேற்கொள்ளும் என்றும் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின்போது நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர். ச. உமா, சட்டமன்ற உறுப்பினர்கள் பெ. இராமலிங்கம், கு. பொன்னுசாமி, மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் ஆவின் பொதுமேலாளர் ஆர். சண்முகம், பால் உற்பத்தியாளர்கள், ஆவின் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, நவ. 22 -

நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாகையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் இன்று (22.11.2023) காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.செல்வம் தலைமையில் நடைபெறுகிறது.



கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

பொருள். 1. டிசம்பர் 17 சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு.

2. தலைமைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பி.எல்.ஏ.2, மற்றும் பி.எல்.சி.யினர் பணிகளை துரிதப்படுத்துதல்,

3. வரும் 25 மற்றும் 26தேதிகளில் நடைபெற உள்ள வாக்காளர் பட்டியல் பெயர்சேர்தல் சிறப்பு முகாம்.

4. வரும் 27.11.2023 அன்று கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து

5. கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தி.மு.க. இளைஞரணி 2வது மாநில மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கவும், மாநில உரிமை மீட்கவும் பரப்புரை செய்ய தஞ்சை மத்திய மாவட்டத்திற்கு வருகை புரிந்த இருசக்கர வாகனப் பிரச்சார குழுவினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் தஞ்சை பெரியக்கோவில் அருகில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, கேடி.மகேஷ்கிருஷ்ணசாமி, தஞ்சை மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் அஞ்சுகம் பூபதி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணியினர் மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.